**த. நா.ச.பே. எண் : 021** **நாள் : 29.09.2015**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை 29.9.2015

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உற்பத்தியைப் பெருக்கி நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தச் செய்வதிலும், வேலை வாய்ப்பினை உருவாக்குவதிலும் சிறந்து விளங்கும் தொழில் வளத்தைப் பெருக்குவதில் பொறுப்புணர்வுடனும், தொலை நோக்குப் பார்வையுடனும், எனது தலைமையிலான அரசு செயல்பட்டு, அதில் மகத்தான வெற்றியும் கண்டு இருக்கிறது.

இந்தியாவில், தமிழகத்தை தொழில் துறையில் வலிமை மற்றும் எழுச்சி மிக்கதாக உருவாக்கவும், சிறந்த, விரும்பத் தக்க முதலீட்டுக்கு உகந்த தேர்விடமாக ஆக்குவதற்கும், எனது தலைமையிலான அரசு, ஆற்றல் மிகு ஆக்கபூர்வமான கொள்கைகளை வெளியிடுதல், திட்டமிடுதல் மற்றும் அவைகளை சீரிய முறையில் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதற்காக, தமிழ்நாடு தொழில் கொள்கை 2014, மோட்டார் வாகனங்கள் மற்றும் உதிரி பாகங்கள் கொள்கை 2014 மற்றும் உயிரி தொழில் நுட்பக் கொள்கை 2014 ஆகியவைகள் வெளியிடப்பட்டன.

தொழில் வளர்ச்சியினை மேலும் செம்மைப்படுத்தும் வகையிலும், அதிக தொழில் முதலீட்டினை ஈர்க்கும் வண்ணமும், மாநிலத்தின் தொலை நோக்குத் திட்டங்களான தொழில் மயமாக்குதல், வேலைவாய்ப்பை அதிகரித்தல், மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், சீரான பகுதி வளர்ச்சி மற்றும் சுற்றுச் சூழலுடன் இணைந்த நிலைத்த நீண்ட கால வளர்ச்சி ஆகியவைகளை அடைவதற்கான ஒருமுகப்படுத்தப்பட்ட முயற்சியாக எனது தலைமையிலான அரசு, மாநிலத்தில் முதல் முறையாக உலக முதலீட்டாளர்கள் சந்திப்பினை செப்டம்பர் திங்கள் 9 மற்றும் 10 ஆகிய தினங்களில் சென்னையில் நடத்தியது. இதில் 2,42,160 கோடி ரூபாய்க்கான முதலீடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

தொழில் வளர்ச்சிக்கு பின் வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களின் சமூக பொருளாதார வளர்ச்சியில் ஆக்கபூர்வமான தாக்கத்தை ஏற்படுத்தவும், தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கவும் எனது அரசு மிகுந்த முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில், ராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டத்தில் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தால் சிப்காட்-ஆல் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா Integrated Textile Processing Park ஒன்று 150 கோடி ரூபாய் மதிப்பில் சுமார் 224 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பூங்காவில் நாளொன்றுக்கு ஒரு கோடி லிட்டர் திறனுள்ள, கடல் நீர் சுத்திகரிப்பு ஆலை ஒன்று நிறுவப்படும். இப்பூங்காவில் இடம் பெறும் 30 ஜவுளித் துறை தொழில் நிறுவனங்கள் சுமார் 450 கோடி ரூபாய் செலவில் அமையப் பெறும். இவற்றின் மூலம் 6,000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு

உருவாகும். மத்திய அரசின் மானியமாக 70 கோடி ரூபாயும், சிறப்பு நோக்க முகமையின் பங்கு தொகையாக 40 கோடி ரூபாயும், மாநில அரசு மற்றும் சிப்காட் நிறுவனத்தின் 40 கோடி ரூபாயும் திட்ட நிதியாக இருக்கும்.

2. தமிழ்நாட்டில் தொழில் வளத்தை பெருக்கும் பொருட்டு, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் TIIC, முதல் தலைமுறை தொழில் முனைவோர்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை ஊக்குவித்து சிறப்பான முறையில் நிதியுதவி வழங்கி வருகிறது. தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தின் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்காக எனது அரசு 100 கோடி ரூபாயை ஒரு முறை மூலதனமாக வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மூலதனத்திற்கு தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் TIDCO-வும் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனமும் SIPCOT-ம் தலா 50 கோடி ரூபாயினை வழங்கும்.

3. நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் பகுதியில் தனியார் நிறுவனத்துடன் இணைந்து கூட்டாக காஸ்டிக் சோடா தொழிற்சாலையை, தமிழ்நாடு உப்பு நிறுவனம் துவக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தொழிற்சாலையில் ஆண்டொன்றுக்கு 36,000 மெட்ரிக் டன் காஸ்டிக் சோடா உற்பத்தி செய்யப்படும். இத்திட்டம், சுமார் 200 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. கோயம்புத்தூரில் தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கத்துடன் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அமைந்துள்ள டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட் நிறுவனமானது, 32 கோடியே 61 லட்சம் ரூபாய் முதலீட்டில் சிறிய மற்றும் நடுத்தர தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் உடனடியாக தொழில் தொடங்குவதற்கு தேவையான, அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய அபிவிருத்தி மையம் ஒன்றினை ஏற்படுத்தும் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அபிவிருத்தி மையத்திற்கு தேவைப்படும் கட்டட மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த 22 கோடியே 61 லட்சம் ரூபாயினை டைடல் பார்க் கோயம்புத்தூர் நிறுவனத்திடம் இருந்தும் 10 கோடி ரூபாய் மத்திய அரசின் ASIDE மானியமாகவும் பெறப்படும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 1,000 பேருக்கு நேர்முக மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டு, இதன் மூலம் கோயம்புத்தூரின் பொருளாதார வளர்ச்சி மேலும் மேம்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. மாநிலத்தில் உள்ள வானூர்தி உற்பத்தி சார்ந்த நிறுவனங்களின் வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில், காஞ்சிபுரம் மாவட்டம், திருபெரும்புதூர் வட்டம், வல்லம்–வடகால் கிராமங்களில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் TIDCO சுமார் 350 கோடி ரூபாய் முதலீட்டில் சுமார் 2 லட்சம் சதுர அடி பரப்பளவில் உயர் கணினி மற்றும் பொறியியல் வடிவமைப்பு மையம் ஒன்றினை அமைக்கும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மையம், தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் வானூர்தி உதிரி பாகங்களை வடிவமைக்கவும் மற்றும் மேம்படுத்தவும் ஏதுவாக அதி வேக கணினி மற்றும் வடிவமைப்பு வசதிகளை கொண்டதாக இருக்கும். இம்மையத்தில் 50-க்கும் மேற்பட்ட வானூர்தி உதிரி பாகங்களை, வடிவமைக்கும் மற்றும் மேம்படுத்தும் நிறுவனங்கள் தங்களது மையங்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி

நிறுவனத்தால் TIDCO-வால் அமைக்கப்பட உள்ள சென்னை ஏரோஸ்பேஸ் பார்க் லிமிடெட் (Chennai Aerospace Park Limited) என்ற சிறப்பு நோக்கு நிறுவனம் மூலம், 350 கோடி ரூபாய் முதலீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. மார்ச் 22, 2012–ல் என்னால் வெளியிடப்பட்ட தமிழ்நாடு தொலை நோக்குத் திட்டம்–2023 ஆவணத்தில் சென்னை – ராணிப்பேட்டை மற்றும் ராணிப்பேட்டை – ஓசூர் தொழில் வளாக வழித் திட்டங்கள் நட்சத்திர திட்டங்களாக அறிவிக்கப்பட்டன. தற்போது இவ்விரண்டு தொழில் வளாக வழித் திட்டங்கள் ஒன்றிணைக்கப்பட்டு சென்னை–பெங்களூரு தொழில் வளாக வழித் திட்டம் என செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேற்கண்ட தொழில் வளாக திட்டப் பகுதியில் உள்ள பொன்னேரியில் சிறப்பு நோக்க நிறுவனம் SPV மூலம் பொன்னேரி தொழில் முனையம் Ponneri Industrial Node, 20 ஆண்டுகளில் மூன்று கட்டங்களாக மேம்படுத்தப்படும். 13,314 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2016–19 காலக் கட்டத்தில் இத்திட்டத்தின் முதற்கட்டம் நிறைவேற்றப்படும் என்பதை பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டம் திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி தாலுகாவில் உள்ள 10 கிராமங்களை உள்ளடக்கிய சுமார் 21,996 ஏக்கர் பரப்பளவில் அமையும்.

7. என்னால் வெளியிடப்பட்ட உயிரி தொழில் நுட்ப கொள்கையில் குறிப்பிட்டுள்ளவாறு 50 கோடி ரூபாய் நிதியுடன் "உயிரி தொழில்நுட்ப மூலதன முதலீட்டு நிதி "Biotechnology Venture Capital Fund'' ஒன்று உருவாக்கப்படும். இந்த நிதிக்காக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் TIDCO 10 கோடி ரூபாயும், டைடல் மற்றும் டைசல் நிறுவனங்கள் இணைந்து 10 கோடி ரூபாயும், மாநில அரசு 5 கோடி ரூபாயும் அளிக்கும். தனியார் பங்களிப்பு மூலம் 25 கோடி ரூபாய் நிதி பெறப்படும்.

8. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் TIDCO-வும் இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனமும் (ITPO) இணைந்து கூட்டுத் துறையில் அமைத்த நிறுவனமான, தமிழ்நாடு வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்தால் TNTPO, சென்னை நந்தம்பாக்கத்தில் சென்னை வர்த்தக மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மையம் கூடுதலாக 16,000 சதுர மீட்டர் கட்டடப் பரப்பளவு கொண்ட கண்காட்சி அரங்குகள் மற்றும் இதர வசதிகளான உணவு அரங்கம், பல அடுக்கு வாகனங்கள் நிறுத்துமிடம் Multi-tier Car Park, ஊழியர்கள் தங்குமிடம், பயன்பாட்டு கட்டடம் போன்ற வசதிகளுடன் சுமார் 298 கோடி ரூபாய் மதிப்பீட்டில், விரிவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்திற்கான நிதி மத்திய அரசின் இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்திடம் இருந்தும், தமிழ்நாடு வர்த்தக மேம்பாடு நிறுவனத்திடம் இருந்தும் பெறப்படும். இந்த வசதி தமிழ்நாட்டின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை வளர ஏதுவாக இருக்கும்.

9. டிரான்ஸ்போர்ட் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா (Transport Corporation of India) என்ற நிறுவனத்தின் துணை நிறுவனமான டிசிஐ DISTRIBUTION சென்டர்ஸ் லிமிடெட் என்ற நிறுவனம், சரக்காளுமை பூங்கா Logistics Park ஒன்றினை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் TIDCO-வின் வழிகாட்டுதல் மூலம் 270 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், சுமார் 43 ஏக்கர் பரப்பளவில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள திருப்பெரும்புதூர் மற்றும் அதனை ஒட்டிய திருவள்ளூர்

மாவட்டத்தில் உள்ள, உளுந்தை கிராமம் ஆகிய பகுதிகளில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டம் 2 அல்லது 3 ஆண்டுகளில் பல்வேறு கட்டங்களில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 700 நபர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாகும்.

10. திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை 37 கோடியே 19 லட்சம் ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடமிருந்து National Co-operative Development Corporation - இடமிருந்து பெறப்படும் நிதி, மாநில அரசு நிதி மற்றும் சர்க்கரை ஆலையின் நிதி ஆகியவற்றின் உதவியோடு இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

11. நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை 56 கோடி ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடமிருந்து National Co-operative Development Corporation இடமிருந்து பெறப்படும் நிதி, மாநில அரசு நிதி மற்றும் சர்க்கரை ஆலையின் நிதி ஆகியவற்றின் உதவியோடு இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

12. அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் செயல்திறனை மேம்படுத்தவும், உற்பத்தி செலவை குறைக்கவும் 25 கோடியே 80 லட்சம் ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடமிருந்து (National Cooperative Development Corporation) பெறப்படும் நிதி மாநில அரசு நிதி மற்றும் சர்க்கரை ஆலையின் நிதி ஆகியவற்றின் உதவியோடு இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

மேற்காணும் அறிவிப்புகள், தொழில்கள் வளரவும், உற்பத்தி பெருகவும், தொழிலாளர்கள் வளமோடு வாழவும், புதிய வேலைவாய்ப்புகள் உருவாகவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*****

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**